சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

எம் சி ஓ பி எண்.54/2023

2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 01 ம் நாள் எ.ம.சா.2 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு.சபரீசன், பென்ச் கிளார்க், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராமர் | வயது | 33 |
| த/பெ | செல்வராசு | வட்டம் | திருச்சி |
| விலாசம் | தில்லை நகர், திருச்சி | மாவட்டம் | திருச்சி |
| | | தொழில் | சட்ட அதிகாரி |

முதல் விசாரணை :

நான் இந்த மனுவின் 2 ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் சட்ட அதிகாரியாக பணி புரிந்து வருகிறேன். நான் எனது முதல் விசாரணையை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதனை ஏற்றுக் கொள்ளும் படி பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். அதில் உள்ள கையெழுத்துக்கள் என்னுடையது தான்.

| ***வ. எண்.*** | ***தேதி*** | ***ஆவண விபரம்*** | ***ஆவணத்தின் தன்மை*** | ***ஆவண வரிசை*** |
|---|---|---|---|---|
| 1 | | காப்பீடு | பதிவிறக்கப்பட் நகல் | எ.ம.சா.ஆ.1 |
| 2 | | MVI அறிக்கை | நகல் | எ.ம.சா.ஆ.2 |
| 3 | | வழக்கறிஞர் நோட்டீஸ் | நகல் | எ.ம.சா.ஆ.3 |
| 4 | | திருப்பப்பட்ட அஞ்சல் அட்டை | நகல் | எ.ம.சா.ஆ.4 |

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை-**

எனக்கு இந்த வழக்கை பற்றி எல்லா விவரமும் தெரியுமா என்றால் ஆவணங்களின் அடிப்படையில் தெரியும். வட்டார போக்கு வரத்து ஆய்வாளரிடம் ஓட்டுநர் உரிமம்

காட்டாததால் மட்டுமே ஓட்டுநர் உரிமம் இல்லை என்று உறுதியாக கூறமுடியாது என்றும் அவர் ஓட்டுநர் உரிமத்தை வைத்திருக்காலம் என்றால் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையில் ஓட்டுநர் உரிமம் இல்லாததால் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யாததால் மட்டுமே ஈ சலான் வழங்கப்பட்டுள்ளது என்றும் அவரிடம் ஓட்டுநர் உரிமம் இல்லை என்று கூறமுடியாது என்றால் சரி அல்ல. அவரிடம் ஓட்டுநர் உரிமம் இருப்பதால் தான் அதனை ஒப்படைக்க சொல்லி அறிவிப்பு அனுப்பியுள்ளோம் என்றால் ஓட்டுநர் உரிமம் இருந்தால் ஒப்படைக்குமாறு அறிவிப்பு அனுப்பினோம். அந்த அறிவிப்பு என்ன ஆனாது என்றால் அந்த முகவரியில் அவர் இல்லை என திரும்பி விட்டது. குற்றவியல் வழக்கில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியாது. குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட விட்டது என்றும் நான் ஆவணங்களை பார்க்காமலேயே பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல. ம.சா.ஆ.2 ஆக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரி தான். இன்வாஸ்க்கும் பில்லுக்கும் என்ன வித்தியாசம் என்றால் இன்வாஸ்ஸில் மொத்தமாகவும் பில் தனியாக இருக்கும். இன்வாஸ்ஸில் உள்ள தொகையை தான் பில்லாக செலுத்துவார்கள் என்றால் சரி அல்ல. மனுதாரரர் போலீயாக ஆவணங்களை தயார் செய்ததாக காவல் நிலையத்தில் புகார் ஏதாவது அளித்துள்ளோமா என்றால் இல்லை. அந்த பில்கள் உண்மையானதா இல்லையா என்று பார்ப்பதற்கு நீதி மன்றத்தில் மனு செய்துள்ளேனா என்றால் இல்லை. விபத்தை நேரில் பார்க்க வில்லை. விபத்து உண்மை என தெரிந்ததால் தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு குற்ற இறுதி அறிக்கையும் தாக்கல் செய்யப்பட்டு குற்றவியல் விசாரணையும் நடந்து வருகிறது எனறால் சரி அல்ல. பொதுவாக நீதிமன்றங்களில் காப்பீடு விதி மீறல் வழக்குகளில் காப்பீட்டு நிறுவனத்தை நஷ்டயீடு செலுத்தி விட்டு வாகன உரிமையாளர்

இடம் வசூல் செய்து கொள்ள உத்தரவு பிறப்பிக்கப்படும் என்றால் நீதி மன்றம் உத்தரவிடும் பட்சத்தில் அவ்வாறு செலுத்துவோம். காப்பீட்டு நிறுவனம் தான் நஷ்டயீடு செலுத்த கடமைப்பட்டுள்ளது என்றால் சரி அல்ல.

(1ம் எதிர் மனுதாரர் தரப்பில் யாரும் ஆஜர் இல்லை நீதி நலனை கருத்தில் கொண்டு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

| |
|---|
| மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது. |

ஒம்/- கா. கெங்காராஜ்,
சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.